வாராந்த பாடசாலை பணித்தாள்

தரம்: 11

பாடம்: தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல்.

வாரம்: ஆகஸ்ட் 4

தலைப்பு: வலைப்பக்கமொன்றில் பட்டியல்களைச் சேர்த்தல்

மாணவர் செய்ய வேண்டிய பணிகள்:

(i) பல்வேறு வகையான பட்டியல் வகைகளை அறிய வலைத்தளமொன்றை பார்வையிடவும்.

(ii) நீங்கள் கவனித்த பட்டியல்களை ஒழுங்கமைக்கப்பட்ட பட்டியல்கள், ஒழுங்கமைக்கப்படாத பட்டியல்கள் மற்றும் விவரண பட்டியல்கள் என வகைப்படுத்தவும்.

(iii) டிஜிட்டல் மற்றும் டிஜிட்டல் அல்லாத பட்டியல்கள் பயன்படுத்தப்படும் பல்வேறு சந்தர்ப்பங்களை அடையாளம் காணவும்.

(iv) விவரண பட்டியல்கள் பயன்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்களை இனங்காணவும்.

(v) ஒழுங்கமைக்கப்பட்ட, ஒழுங்கமைக்கப்படாத மற்றும் விவரண பட்டியல்களைக் கொண்ட எளிய வலைப்பக்கம் ஒன்றை உருவாக்குக.

செயற்பாட்டினை செயற்படுத்துவதற்குதற்கு பயன்படுத்தக் கூடிய புத்தகங்கள்,வலைத்தளங்கள், L.M.S மற்றும் கற்றல் உபகரணங்கள்:

www.youtube.com

www.w3schools.com

www.tutorialspoint.com

www.htmldog.com

www.traversymedia.com

5. கற்றல் முடிவுகள்:

(I) HTML பட்டியல்களை ஒழுங்கமைக்கப்பட்ட,ஒழுங்கமைக்கப்படாத மற்றும் விவரண பட்டியல்கள் என வகைப்படுத்தலாம்.

(ii) HTML ல் ஒழுங்கமைக்கப்பட்ட பட்டியல்களைச் சேர்க்க <OL> ஒட்டு, ஒழுங்கமைக்கப்படாத பட்டியல்களையும் உள்ளிட <ul> ஒட்டு ,விவரண பட்டியல்களை உள்ளிட <dl> ஒட்டு பயன்படுத்துகிறது.

(iii) <li> ஒட்டு பட்டியல்களில் பொருட்களை செருக பயன்படுகிறது.

(iv) <OL>, <UL>, <dl> ஒட்டுக்கள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களை அறிவார்.

தயாரிப்பு : திருமதி M.S.F. ஷம்லா.

கே/ கேகாலை ஸாஹிரா ம.வி. கேகாலை.